# சித்தர்களின் எண்வகை சித்திகள்

57

**முனைவர். ப. இராசேசுவரி**
**உதவிப்பேராசிரியர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார்**
**கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர் – 10.**
**மின்னஞ்சல் –rajilakshu2301@gmail.com**

**ஆய்வு சுருக்கம்**

சித்தர்கள் என்போர் தம் அறிவால் யாவும் உணர்ந்தவர்கள்.யோகத்தால் எல்லாம் பெற முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். மருத்துவத்தில் துறை போனவர்கள். காயகல்ப மருந்து சாப்பிட்டு யோகத்தில் சித்தி அடையலாம் என்பவர்கள். சாதி,சமயம், மூடப்பழக்கம், ஆண் பெண் வேற்றுமை முதலிய எல்லா சமுக்குகளும் நீங்கியவர்கள். உடலை அழியாமல் காக்க முடியும் என்றும் பல ஊழிக் காலம் வாழ முடியும் என்றும் நம்பிக்கை கொண்டவர்கள். வேதாந்த நெறியை சித்தர் நெறி என்றும் கூறுகின்றார்கள். உள் ஒளி காணல், உள்ளே தசநாதன் கேட்டல், கடவுளுடன் இரண்டற கலத்தல் ஆகிய அத்துவிதம் முதலியன சித்தர்களின் தனித்த மொழிகளாகும். இத்தகு சித்தர் மொழிகளின் வழி எண் வகை சித்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** யோகம் – குண்டலினி – கசசுராரம் - வசித்துவம்

**முன்னுரை**

சித்தர் என்னும் சொல் இரு வகையில் பொருள்படுமாறு அமைந்துள்ளது. சித்தை உடையவர்கள் சித்தர்கள் என்றும் சித்தம் என்பது அறிவை குறிக்கும். அத்தகுஅறிவை பரம்பொருளின் மீது செலுத்தியவர்கள் சித்தர்கள் ஆவர் என்றும் குறிப்பிடப்படுள்ளது. தமிழ்நாட்டில்பிறந்து வாழ்ந்தவர்கள் பதினெண் சித்தர்கள்.இவர்கள் அகத்தியர் முதலாக 18 சித்தர்கள் ஆகப் பல்வேறு பட்டியல்களில் கூறப்படுகின்றனர். இத்தகைய சித்தர்கள் அருளிய பாடல்கள் பல உள்ளன. அவற்றின் வழி அட்டமா சித்திகள் குறித்த செய்திகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**எண் வகை சித்திகள்**

தமிழில் வழங்கும் சித்து என்ற சொல்லுக்கு அருள் விளையாட்டு என்று பொருள் கொள்ளலாம். இதனை ஆங்கிலத்தில் mysticism என்று சொல்லால் குறிப்பர். இச்சொல்லுக்கு ஆன்மா பரம்பொருளோடு இரண்டற இணைய எடுத்துக்கொள்ளும் முயற்சி அல்லது அம்முயற்சியில் பெரும் அனுபவம் என பொருள்படும் என்று இரா. மாணிக்கவாசகம் (த.சி.இ.ப.எ-7) தனது சித்தர்கள் என்னும் புத்தகத்தில் கூறியுள்ளார்.

‘சித்’ என்றால் அறிவு. சித்தையுடையவர்கள் சித்தர்கள். அறிவு படைத்தவர்கள் சித்தர்கள்.

ஆகவே சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள் ,விஞ்ஞானிகள் , என்று பொருள் சொல்வதே பொருத்தமாகும் என்பது சாமி சிதம்பரனார் அவர்களின் கருத்து.

யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள் சித்தி பெற்றவர்கள் சித்தர்கள் என்ற பெயர் பெற்றவர். அவை, அணிமா, மகிமா, இலகிமா. பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பன ஆகும்.

அணுவைப் போல சிறியதாகலால் அணிமா என்று அழைக்கப்படும். மேருவைப் போல பெரிதாதலால் மகிமா என்று அழைக்கப்படும். காற்று போல லேசாதலால் லகிமா என்றும் பொன் போல பழுவாதலால் கரிமா என்றும் எல்லாவற்றையும் ஆளுதல் பிராத்தி என்றும் எல்லாவற்றையும் வசப்படுத்துதல் வசித்துவம் என்றும் கூடுவிட்டு கூடு பாய்தல் பிராக்மியம் என்றும் விரும்பியதனை எல்லாம் செய்து முடித்தல் அல்லது அனுபவித்தல் ஈசத்துவம் என்றும் மொத்தம் எட்டு வகை சக்திகள் உள்ளன. இவற்றைக் கைவரப் பெற்றவரே சித்தர் என்று குறிக்கப்படுவர்.

**சித்துக்களின் எண்ணிக்கை:**

சித்தாந்தம் சித்துக்களை, தாயுமானவரின் பாடல் வழி தெளிவாக விளக்குகிறது.

**"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்;**
**கரடிவெம் புலிவாயையும்**
**கட்டலாம்; ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;**
**கட்செவி யெடுத்தாட்டலாம்;**
**வெந்தழலி னிரதம்வைத் தைந்துலே கத்தையும்**
**வேதித்து விற்றுண்ணலாம்;**
**வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்**
**விண்ணவரை யேவல்கொளலாம்;**
**சந்ததமு மிளமையோ டிருக்கலாம்; மற்றொரு**
**சரீரத்தி ன்ம்புகுதலாம்;**
**சலமே னடக்கலாம்; கனன்மே லிருக்கலாம்**
**தன்னிகரில் சித்திபெறலாம்"** **(தா.பா.தே.பா.எ.8)**

என்னும் பாடல் 11 வகையான சித்திகளை செயற்கரிய செயல்கள் என கூறும்சித்தர்களைப் பற்றிப் படிக்கும் போது இவை உண்மையா என ஐயம் எழும். அதனை விளக்கப் பல புராணக் கதைகளும் பக்தி இலக்கிய நிகழ்வுகளும் உள்ளன.

இதேபோல் பாம்பாட்டி சித்தர் தன் பாடலின் வாயிலாகச் சித்துகள் என மொத்தம் 25 குறிப்பிட்டுள்ளார். இதனை,

**“சீறுபுலி யானை யாளி சிங்க முதலாய்**
**சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்!**
**வீறுபெருங் கடவுளை எங்களுடனே**
**விளையாடச் செய்வோமென் றாடுபாம்பே! (பா.சி. பா.எ. - 34)**

என்னும் பாடல் வழி அறியலாம். மேலும், திருவிளையாடல் புராணத்தில் வரும் எல்லாம் வல்ல சித்தரான படலம், அட்டமா சித்து உபதேசித்த படலம், கல்லானைக்கும் கரும்பருத்திய படலம் முதலிய பகுதிகள் பல்வேறு வகையான சித்திகளைக் குறிப்பிடுகின்றன.

**"ஆணைப்பெண் ணுருவாக்கியும் பெண்ணையாணுருவ**
**மாணக்காட்டியு மலடியை மகப்பெறச் செய் துங்"**
**(தி. வி. பு-எ. சி. ப. பா. எ -10)**

என்னும் வரிகள் அட்டமாசத்துகள் குறித்து கூறுவனவாகும். யோக சக்திகள் 64 வகைப்படும் என்றும் ஞானசுத்திகள் 688 கோடி என்றும் ஞான நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனால் ஞானசுத்தியே சிறந்தது என்றும் ஞான நூல்கள் கூறுகிறது. அவைகளில் பல பிரிவுகளும் அடங்கும். ஆனால் எல்லா சித்துகளும் அட்டமாசித்துகளில் அடங்கும் என்றும் ஞான நூல் விரிவாகக் கூறுகிறது.

**“தானான ஆறுபத்து நாலு சித்தி**
**சாற்றினேன் மறைவின்றி திறவுகோல் போல”**

என்று யாகோபு சித்தர் கூறுகிறார். சித்தர்கள் எட்டு வித யோகங்களின் முதிர்ச்சியில் குண்டலினியை எழுப்பி கசசுராரம் என்ற அமுத நிலையில் பொருத்தி ஞானாமிர்தம் உண்டு ஞானப்பழமாய் சமாதி நிலையில் இருப்பார்கள். அப்படி தங்கள் யோக பயிற்சியின் மூலம் எட்டு வித ஆன்ம ஆற்றல்களைக் கைவரப் பெறுகிறார்கள். பல கோடி சித்துகளை சித்தர்கள் பெற்றபோதும் முக்கியமான இந்த எட்டு வித சக்திகளுள் அடக்கி விடுகின்றனர்.

**"ஆடு சித்திகள் அறுபத்து நான்கெழுகோடி**
**கூட்டுறுசித்திகள் கோடி பல கோடி**
**அறிவுறு சித்திகள் அனந்தங் கோடி " -- திருஅருட்பா**
**"சாற்று மதியந்தான் எண் விதமாகும் " -- கோரக்க சித்தர்**
**."மாதவத்தால் இட்ட சித்தி எட்டு பெற்ற**

**“வரிசையினால் வைத்திய நூல் வகையாய் சொல்வேன்" ---- அகத்தியர்**

எனவே பல கோடி சித்தர்களும் இந்த அட்டமாசித்தில் அடங்குவர் என்பது சித்தர்களின் வரிகளின் வழியே அறிய முடிகிறது.

**அணிமா (நுண்மை )**

தோற்றத்தில் பெரிய பொருளை மிகச்சிறியதாக ஆக்குவது அணிமா எனப்படும். அணுவை காட்டிலும் மிகவும் நுண்ணிய வடிவத்தை எடுத்துக் கொள்ளும் தன்மை அனிமா என்று பெயர். உடலில் இருக்கும் அணுவும் அதன் மூலத்தையும் இயற்கையின் உதவியுடன் அறிவின் உயர்வுடன் பிரிக்க முடிந்த சித்தர்களால் எந்த ஒரு பொருளில் இருக்கும் அணுக் கூறுகளைக் கூட்டியும் குறைத்தும் அதன் உருவை மாற்ற முடியும். இதுவே அணிமா சித்தி எனப்படும்.

பிரிங்கி முனிவர் முத்தேவர்களை மட்டும் வலம் வருதல் வேண்டும் என்பதற்காக சிறு வண்டாக மாறினார் என்பது இந்த அணிமா சித்திக்கு உரிய உதாரணமாகும். மேலும், வாமனா அவதாரத்தில் மாபலி சக்கரவர்த்தி மூன்றடி நிலம் கேட்ட வாமன அந்தணன் ஆன திருமாலுக்கு தானம் தரும் பொருட்டு கமண்டலத்தில் நீர்வர்க்கச் செல்லும் பொழுது அசுரகுருவான சுக்ராச்சாரியார் வண்டு வடிவம் கொண்டு தடுக்க முடிந்த செய்தியை ,

**“சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய**
**சக்கரக்கையனே! அச்சோவச்சோ” (பெ.தி.மொ.பா.எ.-7)**

பெரியாழ்வார் திருமொழியில் என்ற பாடல் வரிகளில் விளக்கியுள்ளார். மேலும்,

**“மந்தர மேறு மதிபானு வைமாற்றிக்**
**கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்**
**தந்தின்றி நற்கா மியலோகஞ் சார்வாகும்**
**அந்த வுலகம் அணிமாதி யாமே” (திருமந்திரம் -672)**

என்ற திருமந்திரப் பாடல் அணிமாவை விளக்கி உள்ளது.

**மகிமா (பருமை)**

தோற்றத்தில் மிகச்சிறிய பொருளை மழையிலும் பெரிதாக ஆக்குவது மகிமா. வாமன அவதாரத்தில் திருமால் இரண்டடியால் மூவுலகை அளந்த செய்தியை, திருப்பாவை,

**“ஓங்கி உலகளந்த உத்தமன்” (தி.பா.பா.எ.-17)**

**“அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்”**
**(தி.பா.பா.எ-24)**

என்ற வரிகளில் கூறியுள்ளது. அசோகவனத்தில் துயருடன் இருந்து சீதைக்குத் தூது சென்ற அனுமான் தன் பேருருவம் காட்டிய செய்தியினைக் கந்தபுராணம் உருகாட்டுப் படலம் என தனிப் படலமே அமைத்துக் கூறியுள்ளது. இதுவும் மகிமா சித்திக்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் ஆகும்.

**"எண் திசை மருங்கினும் உலகம் யாவும்" (க.ரா.பா.எ- 53-31)**

கண்ணன் அர்ஜுனனுக்கு உயர்வடிவம் காட்டி உலகம் தன்னுள்ளடக்கம் எனத் தோற்றியதும் மகிமாவாகும்.

**இலகிமா (மென்மை)**

உடம்பைக் கனமாக இல்லாமல் லேசாக செய்து கொள்வதாலும் நீரின் சேற்றிலும் அழுந்தாமல் காற்று போல் விரைந்து செல்லும் வல்லமையைப் பெறுவதும் இலகிமாவாகும். திருநாவுக்கரசரைச் சமணர்கள் சமய பகைக் காரணமாகக் கல்லில் கட்டி கடலில் இட்டபோது அவர் மிதந்து வந்ததை,

**"சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே. (தி.நாவு.தே.பா.எ.-1)**

என்ற பாடல் வழி அறியலாம். இவ்வாறு கல் மிதந்து கரை சேர்ந்தது இலகிமா சித்தியாகும். இந்த சித்தியைத் திருமூலர்,

**"ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்" (திருமந்திரம் -19)**

தம் பாடலில் கூறியுள்ளார்.கண்ணன் தன் பசுக்களுக்கு மலையைக் குடையாகப் பிடித்ததும் இந்த சித்தியே ஆகும்.

**கரிமா (எடையானதாகுதல்)**

லேசான பொருளை மிகவும் சுமை உடைய பொருளாக ஆக்குவது கரிமாகும். புறாவின் எடைக்காகத் தன் தசையைத் தருவதாக கூறிய சிபிச் சக்கரவர்த்தி, இறுதியில் தானே ஏரி தராசில் அமர்ந்த பின்னரே தராசுத் தட்டு புறாவுக்குச் சமமாகியது என்பது, வரலாற்றிலும் இலக்கியத்திலும் காணப்படும் செய்தியாகும். அமர் நீதி நாயனாரிடம் கோவணம் பெற வேண்டி வந்த இறைவனுக்கு ஒரு கோவணத்திற்காகத் தம்மிடம் உள்ள அனைத்துப் பொருட்களையும் வைத்தும் இணையாகாமல் தாமும் தன் மனைவியும் ஏறி அமர்ந்த பின்னரே, சமமானது என்பதும் கரிமா ஆகும். இதனை,

**"தவநிறைந்த நான் மறைப் பொருணூல்களாற் சமைந்த"**

**(பெ.புரா. ப.எ.தி.வா.அ.ச.பா.எ-32)**

என்னும் பெரிய புராண பாடல் விளக்குகிறது. பரஞ்சோதி முனிவர் பரம அணுவைப் போல் உள்ளதை பெருமலை பாரம் வரையில் கூட தன் யோகத்தால் செய்ய முடியும் என கரிமா சித்தியைக் கூறியுள்ளார்.

**பிராத்தி**

யோகி ஒருவர் தன் யோக பயிற்சியின் பலத்தால் நினைத்த போது எந்த உலகத்திற்கும்,எந்த இடத்திற்கும், போய்வரும் தன்மை பிராத்தி சித்தி எனப்படும். இவ்வுலகத்து எவ்விடத்தும் தடையின்றி சஞ்சரித்தல் பிராத்தியாகும். திருவிளையாடல் புராணத்தில் எல்லாம் வல்ல சித்தரான படலம் என்னும் பகுதியில் சிவன் நான்கு திசையிலும் ஒரே சமயத்தில் தோன்றியதாகக் காட்சியளித்ததும் பிராத்தியாகும். இதனை,

**"தேடருங் திர்மணி முடிச் செழியனும் பாண்டி"**

**(தி.வி.பு.ரா.எ.சி.ப.பா.எ-2)**

என்னும் பாடல் வழி அறியலாம்.

**பிராகாமியம்**

பிறர் காயத்தில் நுழைந்து நினைத்தவரிடத்தில் அக்கணமே தோன்றுவது பிரகாமியமாகும். அவ்வையார் இளமையிலேயே முதுமை வடிவம் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தம் வடிவை மாற்றிப் பேய் வடிவு பெற்றதும், திருமழிசை ஆழ்வார் காஞ்சியில் ஒரு முதுமகளை இளைய வயதினளாக மாற்றியதும், சிவயோகி மூலன் என்னும் இறந்த இடையன் உடலில் புகுந்து திருமூலர் ஆகியதும் இந்த பிரகாமியமாகும். இதனை,

**"விண்ணில்ரவி தன்னுடன்பின்**
**வெயிலாலனைத்தும் விளக்குபோல்" -பரஞ்சோதி முனிவர்**

என்னும் பாடல் விளக்கியுள்ளது.

**ஈசத்துவம்**

ஐந்து தொழிலையும் நடத்துவதால் ஈசத்துவம் எனப்படும்.ஞானசம்பந்தர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியதும், சிவபெருமான் கல்யானைக்கு உயிர் கொடுத்து கரும்பு அருந்தியதும் ஈசத்துவம் ஆகும். இதனை,

**"மட்டிட்ட புன்னையங்**
**கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான்**
**கபாலீச் சரம்அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின்**
**உருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே**
**போதியோ பூம்பாவாய். " (தி.ஞா.தே.பா.எ-1)**

என்னும் திருஞானசம்பந்தர் தேவார பாடல் வரிகளால் அறிய முடிகிறது. இது மட்டுமின்றி

திருஓத்தூரில் சமணர்வாதத்தில் ஆண் பனையைப் பெண்னையாக்கிய வரலாறும் ஈசத்துவம் என்னும் சித்தியே ஆகும். இதனை,

**"பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி**
**ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்**
**ஓத்தூர் மேய வொளிமழு வாள்அங்கைக்**
**கூத்தீ ரும்ம குணங்களே"** **(தி.ஞா.தே.பா.எ- 1.54.1)**

என்னும் பாடல் வழி அறியலாம்.

**வசித்துவம்**

ஏழு வகை தோற்றம் ஆகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றை தன் வசப்படுத்துதல் வசித்துவமாகும். சேதன, அசேதனப் பொருட்களைக் கைவரப் பெற்றவர்கள் யோகிகள். தன் பிண்டத்தில் உள்ள 96 தத்துவங்களை கைவரப்பெற்று அதனை அடக்கி ஆளும் தன்மை உள்ளவர்களுக்கு யோக அண்டத்தில் உள்ளதையும் அடக்கி ஆளும் தன்மை வந்துவிடும். இந்த அடக்கி ஆளும் சித்திக்கு வசித்தும் என்று பெயர். இதனை,

**"காலொடு லிருங் கலக்கும் வகைசொல்லிற்"** **திருமூலர்**

என்னும் பாடல் விளக்குகிறது. மேலும் சமணர் பகையின் காரணமாக திருநாவுக்கரசரைக் கொல்வதற்காக ஏவி விட்ட யானையை அவர் தன் வசப்படுத்திய செய்தியை, அவர் தம் தேவாரத்தில்,

**"சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்**
**சுடர்த் திங்கட் சூளாமணியும்**
**வண்ண உரிவை யுடையும்**
**வளரும் பவள நிறமும்"** **(தே.கொ.யா.ச.பா.எ.-1)**

என்னும் பாடல் வழி அறியலாம்.

**முடிவுரை**

சித்தி என்பது யோக முறைகளால் மனிதரடையும் பேறு என்பதையும், அவை எட்டு வகைப்படும் என்பதையும், அவை எண்பெரும் சித்திகள் எனக் குறிக்கப்படுகின்றன என்பதையும், இக்கட்டுரை வழி அறியலாம். இந்த எண்வகை சித்திகள் மட்டுமின்றி சித்திகள் 64 வகைப்படும் என்றும் 688 கோடி என்றும் பலவாறு உள்ள கருத்துக்கள் தொகுத்து கூறப்பட்டுள்ளது. அனிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம்,வசித்துவம்என்பன குறிப்பு விளக்கங்கள் உடன் அவற்றின்கண் பக்தி இலக்கியத்திலும் புராணங்களிலும் உள்ள பல வகைப்பட்ட சான்றுகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**துணை நூல் பட்டியல்**

1. அறிவொளி. அ, சித்தர் பாடல்கள், வர்த்தமான பதிப்பக வெளியீடு, சென்னை.
2. கோபால கிருஷ்ணமாச்சாரியார். வை.மு, கம்பராமாயணம், உமா பதிப்பகம், சென்னை-600 001.
3. சிவஞானம்.வீ, திருஞானசம்பந்தர் தேவாரம், விஜயா பதிப்பகம், கோவை-641 001.
4. சிவஞானம்.வீ, திருமந்திரம்,வீ. சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை-641 001.
5. சிவஞானம்.வீ, திருநாவுக்கரசர் தேவாரம், விஜயா பதிப்பகம், கோவை-641 001.
6. சிவகாந்தன். கே. ஆர், சித்தர்கள் தத்துவமும் யோக நெறிமுறைகளும், , சைவ சித்தாந்த நூற்பதிப்பகக் கழகம், சென்னை-600 018.
7. மணிவாசகர் புலவர்,திருவருட்பா, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-600 014.
8. நிர்மலாமோகன், தமிழக சித்தர் இலக்கியம் ,சாகித்தியஅகாதெமி,புது டெல்லி-110001
9. ஸ்ரீமன் சுவாமி சித்பவானந்தர், தாயுமானவர் பாடல்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சிராப்பள்ளி-639115.